# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.** DEGREE EXAMINATION – **TAMIL LITERATURE**

**FIRST** SEMESTER – **APRIL 2016**

**TL 1503 - MODERN LITERATURE**

Date: 03-05-2016 Dept. No. Max. : 100 Marks
Time: 01:00-04:00

**பகுதி-அ**

**பின்வரும் வினாக்களுக்கு 20 சொற்களில் விடையளிக்க.** (10x2=20)

01. ஆலையின் சங்கை ஊதும்படி இசையமுதில் வேண்டுவதேன்?
02. தமிழரின் திருநாளில் எவையெல்லாம் தீர்ப்பது நல்லறமாகும்?
03. கோட்டைச்சுவரில் துருவேறிய கத்திகள் எவ்வாறு காட்சியளித்தன?
04. சிற்பியின் படைப்புகளில் எவையேனும் நான்கினை எழுதுக.
05. ‘பெண்ணுக்கே பேசுமவள் கண்ணுக்கே சொக்கிவிட்டார்’ யார் யாரிடம் கூறியது?
06. மன்னன் மகன் வணிகன் மகளை மணம் புரிந்தால் கிடைக்கும் தண்டனை யாது?
07. மிஷன் வீட்டு அக்காவின் பெயர் என்ன?
08. தங்கராஜ் செய்துவந்த தொழில் யாது?
09. சோவியத்தில் பொதுவுடைமை மலர வழி காட்டியவர் யார்?
10. காங்கிரஸின் கொள்கைகளில் ஏதேனும் ஒன்றினைக் குறிப்பிடுக.

**பகுதி-ஆ**

**எவையேனும் ஐந்தனுக்கு ஒன்றரைப்பக்க அளவில் விடையளிக்க.** (5x7=35)

11. தமிழர் தொண்டு குறித்து பாவேந்தர் கூறுவன யாவை?
12. தூய்மை, பொறுமை ஆகிய குணங்களை எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும் என்று இசையமுதில் பாரதிதாசன் குறிப்பிடுகிறார்?
13. அம்மா எவ்வாறு வாழ்ந்து கொண்டிருப்பதாக ஆசிரியர் சிற்பி மூடுபனி கவிதை வழி விளக்குகிறார்?
14. மூடுபனியின் பொழுது நிகழும் நிகழ்வுகளை எடுத்துரைக்க.
15. கவிமகள் கண்ணை நாடகத்தில் இடம்பெறும் உவமைநயங்களையும், மொழிநடையையும் விளக்குக.
16. ‘‘புத்தம் வீடு’’ புதினம் வழி அறியலாகும் பனைமரத் தொழிலாளிகளின் வாழ்வியலை விளக்குக.
17. ‘இந்தி’ திணிப்பில் இராஜாஜி அவர்களின் பங்கினை விவரி.

**பகுதி-இ**

**மூன்றுபக்க அளவில் விடையளிக்க.** (3x15=45)

18. சிறுவர்களின் கடமைகளாகப் பாவேந்தர் கூறுவன யாவை?

**( அல்லது )**

பெண்களின் சிறப்புகளாக இசையமுதில் இடம்பெறும் கருத்துரைகளை எடுத்துரைக்க.

19. தன்னுடைய அனுபவங்களாக சிற்பி அவர்கள் கூறுவனவற்றை மூடுபனி கவிதை வழி விவரி.

**( அல்லது )**

நக்கண்ணையின் தியாகத்தை கவிமகள் கண்ணை நாடகம் வழி உணர்த்துக.

20. புத்தம் வீடு புதினத்தில் இடம்பெறும் கதை மாந்தர்களின் பண்புநலன்களை விவரி.

**( அல்லது )**

மதுவிலக்கு குறித்து தமிழருவி மணியன் கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

************